


**28.02.2025**

## தலைப்பு செய்திகள்

1. இந்தியா ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக உடன்பாட்டிற்கான பேச்சுவார்த்தையை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் மேற்கொண்டார்.

2. காசநோயை இந்தாண்டு இறுதிக்குள் முழுமையாக அகற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

3. புதிய தேசிய கல்விக்கொள்கையை தமிழகத்தில் நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள இருமொழிக்கொள்கையால், மாணாக்கர் ஏராளமான சாதனைகளை புரிந்துள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.

5. தென் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

**********

### பிரதமர் Ursula von der Leyen

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஐரோப்பிய யூனியன் தலைவர் Ursula von der Leyen-உடன் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகளை புதுதில்லியில் இன்று மேற்கொண்டுள்ளார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இதில் முக்கியமாக இடம்பெற்றது.

முன்னதாக ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள், பேச்சுவார்த்தை நடைபெறும் புதுதில்லி ஹைதராபாத் இல்லத்திற்கு ஹைட்ரஜன் எரிசக்தி தொழில்நுட்ப நவீன பேருந்தில் அழைத்து செல்லப்பட்டனர்.

**இதனிடையே நாட்டின் பன்முக கலை** கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெறும் சூ:ஃபி இசை விழாவின் 25ஆவது ஆண்டு தொடக்க நிகழ்ச்சியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு கைவினை பொருட்கள், நாடுமுழுவதும் உள்ள நேர்த்தியான கலைபொருட்கள் உள்ளிட்டவற்றை காட்சிபடுத்தும் கண்காட்சியையும் அவர் பார்வையிடுகிறார்.

**********

**பிரதமர் - தேசிய அறிவியல் தினம்**

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க அறிவியல் பயன்பாட்டின் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் அறிவியலும், அறிவுத்திறனும் ஒருங்கிணைவது பிரச்சனைகளின் தீர்விற்கு திறவுகோலாக இருக்கும் என்றார்.

அறிவியலையும், படைப்பாற்றல் திறனையும் பிரபலப்படுத்துவதோடு, வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க அறிவியல் திறனை மேம்படுத்த பிரதமர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

1928-ம் ஆண்டு ராமன் விளைவை கண்டுபிடித்த சர்.சி.வி.ராமனின் நினைவை போற்றும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் இதே நாளில் கடைபிடிக்கப்படுகிறது.

“வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான அறிவியல் கண்டுபிடிப்புகளில் உலகளாவிய தலைமைத்துவத்திற்கு இந்திய இளைஞர்களை மேம்படுத்துதல்” என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டின் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது.

**********

**குடியரசு தலைவர்**

வளர்ச்சி அடைந்த இந்தியாவின் நீதியை நிலை நிறுத்த தடயவியல் அறிவியல் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் தேசிய தடயவியல் பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர் நாட்டில் குற்றங்களின் தன்மை மாறிவரும் சூழலில் உரிய நேரத்தில் நீதி கிடைப்பதை உறுதி செய்ய தடயவியல் துறை, நவீனபடுத்தப்பட வேண்டும் என்றார்.

விளிம்புநிலை பிரிவினருக்கு உரிய நீதி கிடைப்பதை மாணாக்கர் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இப்பல்கலைகழகத்தில் ஏற்படுத்தப்பட்ட அறிவியல் சார்ந்த குற்றவியல் நீதிமுறையை பாராட்டிய அவர் கலாச்சாரமும், நவீனமும் இணைந்து நீதியை உறுதி செய்யும் வகையில் வளர்ச்சி அடைந்த இந்தியா திகழ்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

**********

**ராஜ்நாத்சிங்**

ஹைதராபாத்தில் பாதுகாப்பு மற்றும் விமான கண்காட்சியை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

3 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஏவுகணைகள் பீரங்கிகள், ராணுவ தளவாடங்கள் ட்ரோன் விமானங்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

**********

**ஜே.பி.நட்டா**

நாட்டிலிருந்து காசநோயை இந்தாண்டு இறுதிக்குள் முழுமையாக அகற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம் பூரியில் பொது சுகாதாரம் தொடர்பான 9ஆவது தேசிய உச்சிமாநாட்டில் இன்று துவக்க உரையாற்றிய அவர், 2030ஆம் ஆண்டிற்குள் இந்நோயை முற்றிலும் அகற்ற உலகம் உறுதி ஏற்றுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதற்கான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதால் இந்தாண்டு இறுதிக்குள் இந்த இலக்கை எட்ட முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு புதிய சுகாதார கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஏராளமான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பேறுகால தாய் சேய் இறப்பு விகிதம் இருமடங்காக குறைந்ததோடு மலேரியா நோய் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோயாளிகளை பராமரிப்பதற்கான நல மையங்கள் தொடங்கப்படும் என்றும், நோய் கண்டறியப்பட்ட 30 நாட்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இம்மையங்களில் சிகிச்சை அளிக்கப்படும் என்றும் கூறினார்.

**********

**வேவ்ஸ்**

படைப்பு திறனாளர்கள் மற்றும் கதாசிரியர்களுக்கான சிறந்த வாய்ப்பை வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு அமைப்பு வழங்குகிறது.

எதிர்கால தொலைநோக்கு இந்தியாவிற்கான கருத்துக்களை "waves explorer challenger" என்ற தளத்தின் வாயிலாக Youtube மூலம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பன்முக தன்மை, நம்பகதன்மை படைப்பாற்றல் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அதிகபட்சம் 7 நிமிடங்களுக்குள்ளும், குறைந்த பட்சம் 1 நமிடம் வரையும் சமூகவலைதள பதிவில் இதன் உள்ளடக்கம் இடம்பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகமும், இணையதளம் மற்றும் இந்திய செயலி அமைப்பும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

**********

**ஆளுநர்**

புதிய தேசிய கல்விக்கொள்கையை தமிழகத்தில் நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி வலியுறுத்தியுள்ளார்.

தென்மாவட்டங்களை சேர்ந்த தொழில்முனைவோர், குறு சிறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் இன்று கலந்துரையாடிய அவர், அண்டை மாநில இளைஞர்களுடன் ஒப்பிடுகையில் தமிழக இளைஞர்கள் வாய்ப்புகளை இழப்பதாக கூறியுள்ளார்.

**இதனிடையே சென்னையில் மாநில சட்ட அமைச்சர்** திரு.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் நடைமுறையில் உள்ள இருமொழிக்கொள்கையால், தமிழக மாணாக்கர் ஏராளமான சாதனைகளை புரிந்துள்ளதாக குறிப்பிட்டார்.

**********

**பழனிவேல் தியாகராஜன்**

தமிழகத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களின் உடல் நலத்தை பேணிக்காக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் ஊட்டசத்து உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

**வாய்ஸ்**

**********

**தமிழக அரசு அறிக்கை**

தமிழகம் சீரிய வளர்ச்சி திட்ட செயல்பாடுகளில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், இல்லம்தேடி கல்வி, பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவு திட்டம் போன்றவை சர்வதேச அளவில் பாராட்டுகளை பெற்றுவருவதாகவும் அரசு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**********

**பத்திரபதிவு**

தமிழகத்தில் பத்திரபதிவு அலுவலகங்கள் வரும் மார்ச் மாதத்தில் அனைத்து சனிக்கிழமைகளிலும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கணக்குகளை நிறைவுசெய்ய உள்ளதால் இந்நடவடிக்கை. விடுமுறை நாட்களில் ஆவண பதிவிற்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

**********

**எடப்பாடி**

தமிழ்நாட்டில் தொகுதி மறுவரையறை தொடர்பான அனைத்து கட்சி கூட்டத்தில் அஇஅதிமுக பங்கேற்கும் என்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் அக்கூட்டத்தில் அஇஅதிமுகவின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் என்றார்.

கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர் மக்கள் பிரதான எதிர்கட்சியாக அஇஅதிமுகவை அங்கீகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழகத்தில் போதை பொருட்கள், கள்ளச்சாராய புழக்கத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அஇஅதிமுக தொடர்ந்து வலியுறுத்திவருவதாக குறிப்பிட்டார்.

மகளிருக்கு எதிரான குற்ற சம்பவங்களை தடுப்பதோடு பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றார்.

**********

**கோள்கள் - வாய்ஸ்:**

வானில் ஓர் அரிய நிகழ்வாக செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய 7 கோள்களும் இன்று ஒரே நேர்க்கோட்டில் அணிவகுக்க உள்ளன.

இந்நிகழ்வை பொதுமக்கள் கண்டுகளிக்க காண திருச்சி அண்ணா அறிவியல் மைய கோளரங்கில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, இதன் திட்ட இயக்குனர் திரு.அகிலன் எமது செய்திப்பிரிவிடம் தெரிவித்துள்ளார்.

**********

**Cute**

மத்திய பல்கலைகழகங்களில் முதுநிலை படிப்புகளில் சேர்வதற்கான Cute நுழைவு தேர்விற்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

வரும் 13ஆம் தேதிமுதல் ஏப்ரல் ஒன்றாம் தேதிவரை இணையதளம் வாயிலாக நடைபெறும் இத்தேர்விற்கான நுழைவு சீட்டு உள்ளிட்ட விவரங்களும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைகழகத்தில் MBA பட்டபடிப்பிற்கான நுழைவு தேர்வு மார்ச் 29ஆம் தேதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ளவர்கள் onlincde.annauniv.edu என்ற இணையதளத்தில் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**********

இருவரி

**சிவகங்கை மாவட்டத்தில் புதிய வழிதடங்களில்** மினிபேருந்துகளை இயக்க விருப்பமுள்ளவர்கள் வரும் 10ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் ஆயத்த ஆடையக** உற்பத்தி அலகு அமைக்க விரும்பும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் அதன் நல அலுவலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திருநங்கைகளை** தொழில்முனைவோர்களாக மாற்றும் வகையில் தொழிற்கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் கூறியுள்ளார்.

**நாமக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும்** தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

**********

**யானை**

தென்காசி மாவட்டம் கடையம் வன சரகத்திற்கு உட்பட்ட வன பகுதிகளில் ஐந்திற்கும் மேற்பட்ட காட்டு யானைகள் உலா வருகின்றன.

இவற்றை மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**********

**தூத்துகுடி – வாய்ஸ்:**

**அறுபடை வீடுகள் ஆன்மீக பயண திட்டத்தின் கீழ்,** திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலுக்கு வருகை தந்த 225 மூத்த குடிமக்கள் இன்று சிறப்பு சுவாமி தரிசனம் மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- -- **வாய்ஸ்** - -

**பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில்** பராமரிப்பு பணிகாரணமாக ரோப் கோர் சேவை, இன்று ஒருநாள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**********

**வானிலை:**

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துகுடி, தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக **சென்னை வானிலை ஆய்வு மையம்** தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அப்பகுதிக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

**நாகை – வாய்ஸ்:**

நாகை மாவட்டத்தில் பெய்துவரும் மழையால், கடல்சீற்றத்துடன் காணப்படுவதால், மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

இதனால் படகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

**பேட்மிண்டன்**

**ஜெர்மன் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின்** ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் **Tharun Manne palli** - ∴பிரான்சின் **Toma Popov**-வை இன்று எதிர்கொள்கிறார்.

கலப்பு இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் துருவ் கபிலா – டனிஷா கிராஸ்டோ இணை – சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**டென்னிஸ்**

துபாயில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி ஆஸ்திரேலியாவின் அலெக்ஸை பாப்ரின் இணை - இங்கிலாந்தின் ஜெமி முர்ரே, ஆஸ்திரேலியாவின் ஜான் பீர்ஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********